**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No.775/2023**
**வழக்கு சாட்சி PW-9**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமலைக்குமார் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | நாகய்யா | தொழில் | : | கொத்தனார் |
| கிராமம் | : | ஆயிரப்பேரி | வயது | : | 31 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of October 09th, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் ஆயிரப்பேரியில் குடியிருந்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்துக்கள் என்னுடையது தான். சுமார் 3 வருடங்களுக்கு காவல்நிலையம் சென்றிருந்தபோது, போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க அந்த கையெழுத்தை போட்டு கொடுத்தேன். பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.4** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 16.01.2023 ம் தேதி, 00.15 மணிக்கு இராமைய்யாவின் வீட்டின் பக்கம் வைத்து போலீசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றால் சரியல்ல. மேற்படி பார்வை மகஜரில் நானும்,

துரைராஜ் என்பவரும் கையெழுத்து செய்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது அதற்கு மாறாக எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> **–**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.10.10 13:13:16 +0530